(இ) ஆம் எனில், எத்தனை பேர்கள் மீது?

(உ) எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

(எ) எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரையில் இந்த மோசடி நடந்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : பச்சபனட்டி கூட்டுறவு நாணய சங்கத்தில் ரூ. 19,070 வரை கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அது பற்றி புலன் விசாரணை, காவல்துறை நடத்துகிறது. புலன் விசாரணை முழுவதும் முடியவில்லை. முடிந்தபின் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தச் சங்கத்தில் எந்த ஆண்டு முதல் இந்த ஊழல் ஏற்பட்டுள்ளது? இப்படித் தொடர்ந்து ஊழல் நடைபெரு திருக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இதுபோன்ற மற்ற சங்கங்களிலும் நடைபெருதிருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது என்கிற விவரம் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் 24—12—1964 முதல் 30—3—1967 வரை ஊழல் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு இது கண்டுபிடிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. எட்டுப் பேர்கள் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்டிருக் கிறார்கள். வழக்கு இருக்கிறது.

இதைத்தவிர, மற்றச் சங்கங்களைப் பொறுத்தவரையில், என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பது கொள்கையைப் பொறுத்த விஷயம். அதற்கு ஏப்ரல் 2-ஆம் தேதிதான் பதில் சொல்ல முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Has this kind of mis-appropriation happened only in this particular co-operative society or is it happening in other societies in Hosur taluk?

THE HON. THIRU SI. PA. ADITANAR : I do not have with me, at the moment, statistics regarding misappropriaton, which has happened in other co-operative societies in Hosur taluk. I have given the facts and figures regarding this particular society on which this question was raised.

Chit funds in Tiruchirappalli district

* 467 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether the Government are aware of a large increase of chit funds in Tiruchirappalli district in recent months; and

(*b*) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டம், 1—12—1969 முதல் இம்மாவட்டத்திற்கும் இதற்குமுன் இச்சட்டம் செயலில் இராத பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் நடைபெறும் சீட்டுக்கள் இனி இச்சட்டத்தின் விதித்துறைகளால் முறைப்படுத்தப்படும்.

[1970 மார்ச் 20

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இம்மாதிரி சிட்டு பண்டு ஸ்தாபனங்கள் என்ற பெயரால் பொதுமக்களுடைய பணம் பாழடிக்கப்பட்டு மோசமான முறையில் பலர் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே, சரியான முறையில் சிட் பண்டு ஆக்டைக் கொண்டுவந்து, ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: 1961-ஆம் ஆண்டு சிட்பண்டு ஆக்ட் கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், சென்னை நகரம் ஆகிய இடங்களுக்குத்தான் இருந்தது. மற்ற இடங்களில் இந்தச் சட்டம் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் சிட்டுக் கம்பெனிகளின் பெயரால் ஏமாற்றப்பட்டிருப்பது தெரியவந்தது. அதற்குப் பிறகு இந்தச் சட்டத்தை தமிழ் நாடு முழுவதற்கும் இப்போது அமுல்படுத்தியிருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் 32 வழக்குகள் தொடரப்பட்டு, 28 வழக்குகளில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். நான்கு வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இப்போது அநேக இடங்களில் சிட்பண்டு கம்பெனி இரண்டு, மூன்று மாதம் நடைபெறுகிறது. உடனே மக்களை மோசம் செய்துவிட்டுப்போய்விடுகிறார்கள். சிட் பண்டு சட்டம் நகரத்திற்கு மட்டும் தான் இருக்கிறது. மொஃபசல் பகுதிகளுக்கும் இதைக் கொண்டுவருவார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: நமது மாநிலம் முழுவதற்கும் அந்த சிட் பண்டு சட்டத்தை 1----12----1969 முதல் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். எங்கு தவறு நடந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: Are the Government aware of the fact that in spite of the Act being in existence, there are many unofficial chits which do not possess licence? They do not register themselves. Are the Government aware that this is because there is a lacuna in the Act with the result the chit amount does not go to the one who bids highest in the bidding? Will the Government come forward to bring in a comprehensive legislation to avoid this lacuna in the Act?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: இப்போதே என்ன என்ன குறைகள் இருக்கின்றனவோ அவற்றுக்கு இடமளிக்காத முறையில் விதிமுறைகள் இருக்கின்றன. சிட்டுபண்டு கம்பெனிகள் முன்கூட்டியே பணம் டெபாசிட் பண்ணவேண்டும் என்பது பொதுமக்கள் போடுகிற பணத்திற்கு உத்தரவாதம் அளிப்பதற்குத்தான். இதுபற்றி வேறு எந்தவிதமான புகாரும் இல்லை. இருந்தால் அதுபற்றி யோசிக்கலாம்.

சென்னை நகரில் வாழ்க்கைத்தரப்புள்ளி

* 468 **வினா.—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) சென்னை நகரத்தில் வாழ்க்கைத் தரப்புள்ளி எண் குறைந்துள்ளதா?

(இ) ஆம் எனில், கடந்த ஆறு மாதங்களில் எவ்வளவு புள்ளி இறங்கி உள்ளது?